பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELANADU

மலர்: 19 ஆடி 13 ஷஃபான் 11 இதழ்: 167

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-7-77

# தாராளமாகப் பாவனைப் பொருட்கள் இறக்குமதி

## கண்டியில் அமைச்சர்கள் முடிவு

கண்டி, புதன்

பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் யாவும் தாராளமாக இறக்குமதி செய்யப்படும்.

இன்று கண்டிநகரில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

பால் உணவுகள், குழந்தைகளுக்கான பால்மா, மற்றும் அத்தியாவசியப் பாவனைப் பொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்வதென்று அமைச்சர்கள் முடிவுசெய்தனர்.

### ஆஸ்பத்திரி முத்திரை ரத்து

ஆஸ்பத்திரிகளில் வெளிநோயாளர்கள் 25 சத முத்திரை சமர்ப்பிக்கவேண்டும் என்ற திட்டத்தை உடனடியாக ரத்துசெய்வதென்றும்

(6-ம்பக்கம் பார்க்க)

# "அரசில் சேரமாட்டோம்; மந்திரி பதவியும் இல்லை மக்கள் இட்ட கட்டளையை ஏற்று இயங்குவோம்"

## கூட்டணிச்செயல் அதிபர் 'அமிர்' விளக்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

"அரசில் சேரும் எண்ணமோ அல்லது எந்தவொரு அமைச்சுப் பொறுப்பை ஏற்கும் திட்டமோ எங்களிடம் இல்லை. பொதுத் தேர்தலின்போது தமிழ் மக்கள் எங்களுக்கு இட்ட கட்டளையை மனதிற்கொண்டு, அதனைச் செயற்படுத்த முனைவதுதான் எங்களின் ஒரே இலட்சியம்" என்று தமிழர் விடுதலைக்கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்கள்சேர்ந்து கொள்வார்களா, அமைச்சுப் பதவிகள் எதுவும் வழங்கப்பட்டால் ஏற்றுக்கொள்வார்களா என்று கிளப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில்தான் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்ட விளக்கத்தை வெளியிட்டார்.

"எங்களின் இலட்சியமே வேறானது. நாங்கள் கொள்கைப்பற்றுக் கொண்டவர்கள்" என்று கூறிய திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:

"பொதுத் தேர்தலின் போது நாங்கள் ஒரு இலட்சியத்தை முன்வைத்தோம். மக்களும் மகத்தான தீர்ப்பை வழங்கினார்கள். மக்கள் இட்ட இந்தக் கட்டளையிலிருந்து விடுபட நாம் விரும்பவில்லை. இக்கட்டளையை மனதிற்கொண்டு செயல்படுவோம். கொள்கையை விட்டுக்கொடுக்காமல் செயலாற்றுவோம்.

"எங்களுக்கு எதுவிஷயமாகவும் யாரிடமிருந்தும் இதுவரை அழைப்பு வரவில்லை. அப்படிவந்தாலும்கூட. எந்த விஷயமும் நடவடிக்கைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டு முடிவு மேற்கொள்ளப்படும்" என்றும் கூட்ணிச் செயலதிபர் திரு.அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

### லண்டன் கடிதம்

லண்டன், ஜூலை 27

"ஈழநாடு" பத்திரிகையின் நடுநிலைமையையும், அதன் சிறப்பான பணியையும் பாராட்டி; மான்செஸ்டரிலுள்ள போல்டன் எனுமிடத்தைச் சேர்ந்த ஹஸல் வீதியில் வசிக்கும் ஆர். சண் பின்வருமாறு எழுதுகின்றார்:

"ஈழநாடு" பத்திரிகை' கட்சிசார்பற்ற முறையில் சிறப்பாக ஆற்றிவரும் பணியைப் பாராட்டாமலிருக்க முடியாது. வெளிநாடுகளில் வாழும் எம்மைப் போன்ற தமிழர் இந்த உண்மையை நன்கு அறிவார்கள்...

"அண்மையில் தமிழ் நாட்டின் தலைநகர்சென்ற போதுகூட, நமது 'ஈழநாடு' பத்திரிகையின் சிறப்பினை உணரமுடிந்தது. அங்கிருந்த நண்பர்களுடன் இப் பத்திரிகையின் பெரும்பணி பற்றிப் பேசி அகமகிழ்ந்தோம். வெளிநாடுகளில் வாழும் என் போன்ற தமிழ் இதயங்களின் நல்வாசிகள் என்றென்றும் "ஈழநாடு" பத்திரிகைக்கு உண்டு என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன்...

'மான்செஸ்டர்,லண்டன் பெர்மிங்காம் போன்ற பல பிரித்தானிய நகரங்களில் வாழுகின்ற தமிழர்கள், 'ஈழநாடு" பத்திரிகையை அன்றாடம்வாங்கிப் படித்து மகிழ்ந்திடமுடியவில்லையே என்ற கவலை எமக்குண்டு...

"ஈழநாடு" தனது பணியைத் தொடர்ந்து நடத்தி, தமிழர்களுக்கு ஒரு நல்வழிகாட்ட நமது வாழ்த்துக்கள்..." என்று எழுதியுள்ளார் திரு. சண்.

### தேர்தல் பந்தயத்தில் காதை இழந்தார்

மட்டக்களப்பு, புதன்

தேர்தல் பந்தயம் பிடித்த வாலிபர் ஒருவர் தமது அபேட்சகர் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்துகாதைத்துண்டித்த சம்பவம்ஒன்றுமட்டக்களப்பில் நடந்துள்ளது.

பந்தயத்தில் தோல்வியடைந்தவர் தங்கள் தலையை மொட்டை யடித்துள்ளார்கள்.

### மாநகரசபை ஊழல் விசாரணைக்குழு

கொழும்பு, புதன்

பதவிக்காலம் நீடிக்கப்பட்ட மாநகர சபைகளில் நிகழ்ந்துள்ள நிர்வாக சீர்கேடு, லஞ்ச ஊழல், இன சன உதவி போன்ற ஊழல் பற்றி விசாரணை செய்ய ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுவொன்று ஏற்படுத்தப்படும்.

இ. போ. ச. வில்

### மேலும் 500 பேருக்கு வேலைவாய்ப்பு

கொழும்பு,புதன்

இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றி, தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட 500 தொழிலாளர்களுக்கு மீண்டும் உடனடியாக வேலை வழங்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு சட்டசபை முன் மாணவர் ஆர்ப்பாட்டம்!

## சபைக் கதவு மூடப்பட்டது

சென்னை, ஜூலை 27

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இன்று வரவுசெலவுத் திட்ட விவாதம் நடந்து கொண்டிருந்த வேளையில் வெளியில் மாணவர்கள் பெரும் எடுப்பில் ஆர்ப்பாட்டம் நடத்திக் கோஷமிட்டார்கள்.

மாணவர்களின் கோஷம் சபை நடவடிக்கைகளைத் தடை செய்தமையால் சபையின் கதவுகளும் இழுத்துப்பூட்டப்பட்டன.

சபையில் பின்னர் உரிமைப் பிரச்னையொன்றைக் கிளப்பிப் பேசிய தி. மு. க. உறுப்பினர் ஜனாப் சாதிக்பாச்சா சபையின் கதவுகள் மூடப்பட்டிருந்தமையால் தம்மால் சபைக்கு வர முடியாமல் போய்விட்டதாகவும், இவ்வாறு கதவைமூடி தாம் சபைக்குள்வராமல்தடை செய்யப்பட்டது உரிமை மீறிய செயலாகும் என்றும் அவர் கூறினர்.

மாணவர்கள் சபைக்குள் நுழைய எத்தனித்ததினால் சபையின் கதவுகள் மூடப்பட வேண்டியேற்பட்டது என்று சபாநாயகர் திரு. முனுஆதி கூறினர்.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பல உறுப்பினர்கள் இன்று கருத்துரை வழங்கினார்கள்.

தி. மு. க. உறுப்பினர் திரு. அன்பழகன் பேசியபோது, எல்லைப்போராட்டம், இந்தி எதிர்ப்புப்போராட்டம் போன்றவற்றில் கலந்துகொண்டு சிறை சென்றவர்களுக்கு வழங்கப்பட்டுவந்த மான்யம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனை மீண்டும் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மாநிலத்துக்கு மத்திய அரசு நியாயமான அளவு நிதி வழங்கும்படி கோரவேண்டும் என்

(6-ம் பக்கம் பார்க்க)

### மாணவர்கள் மத்தியில் எம். ஜி. ஆர்.

தமிழக அரசு தலைமைச் செயலகத்துக்கு அருகில் சட்டமாணவர்கள் குழுவொன்றை முதல் அமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் இன்று சந்தித்தார்.

அரசியலில் ஈடுபட வேண்டாம் என்று மாணவர்களை அவர் கேட்டுக்கொண்டார். குறிப்பிட்ட ஒருகட்சிதான் மாணவர்களைத் தூண்டுவிட்டுக்கொண்டிருக்கிறது என்று அவர் கண்டித்தார்.

மாணவர்களின் பல கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொண்டார். மாணவர்கள் மீது பொலிசார் பலாத்காரம் பிரயோகித்த குற்றச்சாட்டுபற்றி அவர் விசாரிக்கப்படும் என்றும் அவர் சொன்னர்.

# அரசியல் வாக்குவாதத்தால் மனமுடைந்தவர் தற்கொலை

கொடிகாமம், புதன்

தமது நண்பருடன் ஏற்பட்ட அரசியல் கருத்து முரண்பாட்டினாலுண்டான மனத்தாக்கத்தினால் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். கைதடி வடக்கு எருதிடலைச் சேர்ந்த மணி என்றழைக்கப்படும் சங்கரன் சின்னராசா (வயது 24) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராவார்.

நண்பருக்கும் சின்னராசாவுக்குமிடையில் அரசியல் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து சின்னராசா மனமுடைந்து காணப்பட்டதாகவும், இதனையடுத்துச் சின்னராசாவின் தந்தை புத்திமதி கூறியதாகவும் தந்தையின் புத்திமதியையும் பொருட்படுத்தாமல் சின்னராசா நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

மரணவிசாரணை நடத்திய சாவகச்சேரி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கந்தசாமி விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

மணிவாக்கு

சிந்தித்துத் தெளிந்துகொள்ளாத ஒன்றையும் நினைத்தலும் பேசுதலும் எழுதுதலும் ஆகாது இவ்வகையில் எவ்வளவு நேரந்தை மிச்சமாக்கலாம் என்று சிந்தித்துப் பார்.

—காந்தி மகான்.

ஈழநாடு
THE EELANAADU

# உணவுப் பிரச்னை

''பட்டினியால் தவிக்கின்ற மக்களின் வயிறு பற்றி எரியும் பரிதாபநிலை இந்தநாட்டில் ஒழியவேண்டும். இதுவே எமது தலையாய குறிக்கோளாகும். உணவுற்பத்தியை நன்கு விருத்தி செய்து உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதே எமது முதல்பணியாகும்'' என்று புதிய காணி விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா கூறியிருக்கிறார்.

உணவு கூட்டுறவு அமைச்சில் தாம் எந்தவித அரசியல் தலையீடுகளுக்கும் இடம் அளிக்கப்போவதில்லையென்றும் இந்த அரசாங்கம் வரையறுத்துள்ள சில பொதுப்படையான திட்டங்களை அமுல்நடத்துவதற்குத் தாங்கள் துணைபுரிவதாகவும் புதிய உணவு கூட்டுறவு அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

வர்த்தக அமைச்சராகப் பதவியேற்றுள்ள திரு. லலித் அத்துலத் முதலி, உணவு நெருக்கடியைத்தீர்க்காததே முன்னைய அரசாங்கம் பொதுத்தேர்தலில் தோல்வியடைந்ததற்குக் காரணம் என்று கருத்து வெளியிட்டிருக்கிறார்.

உணவு விவசாய அமைச்சர், உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர், வர்த்தக அமைச்சர் ஆகிய மூவரும் உணவுப்பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வுகாணப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளனரென்பதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

இந்த மூன்று அமைச்சுக்களும் இணைந்து செயற்பட்டால் உணவுப்பிரச்னைக்கு விரைவில் நல்ல தீர்வுகாண்பது கடினமல்ல.

ஒவ்வொரு பொதுத்தேர்தலும் முடிந்து ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்பட்டதும் அமைச்சர்களாகப் பதவியேற்பவர்கள் 'அதைச் செய்வோம் இதைச்செய்வோம்' என்று கூறிக்கொள்வது வழமையான நிகழ்ச்சிகள்தான். முன்னைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சமயத்திலும் இப்படித்தான் அமைச்சர்கள் பல திட்டங்களைப்பற்றிச்சொன்னார்கள். இலங்கை வானொலியும் நாளும் பொழுதும் புதிய திட்டங்கள் பற்றிச் சொல்லிக்கொண்டே வந்தது.

1965-ம் ஆண்டில் ஆட்சிபீடத்துக்கு வந்த அமரர் திரு. டட்லி சேனநாயகாவும் உணவு உற்பத்தி இயக்கத்தை ஆரம்பித்தார். நாடு முழுவதும் சென்று அந்த இயக்கம்பற்றி பிரசாரம் செய்து மக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வந்தார்.

பின்னர் ஆட்சிக்கு வந்த திருமதி சிறிமா அரசு ''டட்லி அரசாங்கம்வானொலியில்தான் பயிர்செய்தது'' என்று பகிடிசெய்தது!

ஆனால் சிறீமா அரசாங்கமும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னைய அரசு போலவே செய்ததென்பது தேர்தல் பிரசாரங்களில் வெளிவந்த தகவல்.

முன்னைய அரசாங்கங்கள் விட்ட தவறுகளை நன்கு உணர்ந்திருப்பவர்கள் தான் இன்று ஆட்சிபீடத்துக்கு வந்திருப்பவர்கள்.

இதனால்தான் முன்னைய அரசாங்கத்தின் தோல்விக்குரிய காரணத்தை நன்கு ஆராய்ந்து தாம் மேற்கொள்ளவேண்டிய முயற்சிகளைத் துரிதமாக எடுக்க முன்வந்துள்ளனர்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவைப் பிரதமராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்து இன்னும் ஒருவாரம்கூட ஆகவில்லை. இதற்குள் இந்த அரசு பிரச்னையைத் தீர்க்குமா? எப்படித் தீர்க்கப் போகிறது என்பனபோன்ற கேள்விகள் அர்த்தமற்றவை.

உணவுப்பிரச்னை, வேலையில்லாப் பிரச்னை, வாழ்க்கைச்செலவு உயர்வுப் பிரச்னை என்பன நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கியமான பிரச்னைகளாகும்.

இவைகளுக்கு எப்படியோ நல்லதொரு தீர்வுகாண வேண்டுமென்ற நோக்கத்துடன் புதிய அரசாங்கமும் புதிய அமைச்சர்களும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று கண்டியில் தலதாமாளிகையில் எண்கோண மண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்குச் செய்தி விடுக்கவிருக்கிறார்.

பிரதமராகப் பதவியேற்ற பின் அவர் இன்றுதான் மக்களுக்குச் செய்தி விடுக்கப் போகிறார்.

உணவுப் பிரச்னை, வாழ்க்கைச் செலவுப் பிரச்னை ஆகியவற்றுக்கான தீர்வுபற்றியும் அவர் தமது செய்தியில் தொட்டுக்காட்டுவாரென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

எப்படியானாலும் பல புதிய சிந்தனைகளோடு ஆக்க முயற்சியிலீடுபடத் தொடங்கியிருக்கும் புதிய அரசுக்கு கட்சி வேறுபாடுகளை மறந்து ஒத்துழைப்பு அளிக்கவேண்டியது மக்களின் இன்றைய கடமையும் பொறுப்புமாகும்.

## சுந்தரர் குருபூஜை

சுழிபுரம், புதன்

''ஆலயம் தோறும் சென்று இறைவனைப் பாடித் தோத்திரம் செய்து, இறைவனை நண்பனாகவும், தூதுவனாகவும் பயன்படுத்தி உதவி பெற்ற பெருமையும் சுந்தரரையே சாரும்.'' என்று பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் நடைபெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூஜை விழாவில் கலந்துகொண்டு பேசிய தொல்புரம் ஓதுவார் மு. கிருஷ்ண பிள்ளை குறிப்பிட்டார். கல்லூரி ஆசிரியர் திரு. எஸ். கந்தசாமி விழாவுக்குத் தலைமை வகித்தார்.

சுழிபுரம் அறுபத்து மூவர் குருபூசை மடத்திலும், சுந்தரர் குருபூசை கொண்டாடப் பட்டது. யோகி கா. கார்த்திகேசுவின் உரையுடன், புராண படனமும், பண்டிதர் தி பொன்னம்பலவாணரின் பூசை ஆராதனையுடன் ஊழிடாடும் நடைபெற்றன. (அ)

# 'கருத்துப்பரிவர்த்தனையே மாநாட்டின் நோக்கம்'

## உலகத்தமிழாராய்ச்சிமாநாடு பற்றி ஜீன் பிலியோசா கருத்து

யாழ்ப்பாணம், வியா.

''உலக அறிஞர்கள் ஒன்று சேர்ந்து மாநாடு நடத்துவது பல்வேறு விஷயங்களைப் பரிவர்த்தனை செய்வதற்காகத் தான். அந்த ஒருநோக்கத்தைக் கொண்டுதான் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் இத்தகைய மாநாட்டை நடத்தி வருகிறது.''

அனைத்துலகத்தமிழாராய்ச்சி மன்றத் தலைவரும், பாரிஸ் பல்கலைக்கழகம் பாண்டிச்சேரி இந்திய வியல் நிறுவனத்தலைவருமான பேராசிரியர் ஜீன் பிலியோசா யாழ். வளாகத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலேசியா, சென்னை, பாரிஸ் நகர்களில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் பேராசிரியர் ஜீன்பிலியோசா தலைமையில் நடைபெற்றது தெரிந்ததே.

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் இவர் கலந்துகொள்ளவிருந்த போதிலும் கடைசிநேரத்தில் ஏற்பட்ட தடையினால் இவர் இலங்கைவரமுடியாமல் போய் விட்டது.

தற்பொழுது யாழ்ப்பாணம் வந்திருக்கும் பேராசிரியர் ஜீன்பிலியோசா, யாழ். நகரின் பல இடங்களையும் யாழ். வளாகத்தையும் பார்வையிட்டார்.

யாழ்ப்பாண வளாகத்தில் நேற்றுக்காலை பேசுகையில், அவர் மேலும் கூறியதாவது:

''தமிழ் கலாச்சாரத் தொடர்பு விஷயங்கள் பற்றி இந்திய, இலங்கை, தென்னாசிய உலக அறிஞர்கள் நடத்திய ஆராய்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ள தமிழாராய்ச்சி மாநாடு பெருமளவில் உதவக் கூடியதாக இருக்கும்.

### அடுத்த மாநாடு

''அடுத்த தமிழ் ஆராய்ச்சி மாநாடு, ஆபிரிக்க தேசத்திலுள்ள செனகல்நாட்டில்நடைபெறவிருக்கிறது. இதற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப் படவில்லை. ஆனாலும் அநேகமாக 78-ம் ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தில் இம் மாநாடு நடைபெறக்கூடியதாக இருக்கும்.

''இம்மாநாட்டில் மூலிகை சம்பந்தமான விஷயம் நிகழ்ச்சியில் இடம்பெறவிருக்கிறது மூலிகை சம்பந்தமான பழைய நூல்களில் தெரிவிக்கப்பட்டிருப்பவைபற்றி ஆராய்ச்சி நடத்தப்படவிருக்கிறது. ஆபிரிக்கதேசம் மூலிகைக்குப் பெயர்பெற்றதாக இருப்பதால் இம்மாநாட்டை அங்கு நடத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

'புலவர்களான வள்ளுவர், கம்பர் புகழ் உலகறிந்த விஷயம். பொதுப்பண்பாட்டில் இவர்கள்நிலை எப்படி இருக்கிறது என்று அறிவதற்கு இம் மாநாடு உதவக்கூடியதாக இருக்கும்.

### செனகல் மாநாட்டில் தீர்மானிக்கப்படும்

78-ம் ஆண்டு நடைபெறும் இம்மாநாட்டிற்குப் பின்னர், அடுத்த மாநாடு எங்கு நடைபெறும் என்று இப்போது சொல்லமுடியாது. அந்த மாநாட்டில்தான் அடுத்த மாநாடு பற்றித் தீர்மானிக்கப்படும். எந்த நாட்டிலிருந்து அழைப்பு வருகின்றதோ அந்த அழைப்புப்பற்றி ஆலோசித்து அடுத்தமாநாடுபற்றி முடிவு எடுக்கபடும்.

தமிழாராய்ச்சி மாநாடு இலங்கையில் மீண்டும் எப்போ நடைபெறும் என்பதுபற்றி இப்பொழுது எதுவும் சொல்வதற்கில்லை. (க-அ)

## உயரப்புலம் உத்துங்கவிநாயகர் கோவில்

யாழ்ப்பாணம், வியாழன்

உயரப்புலம் உத்துங்கவிநாயகர் ஆலயத்தை அவ்வாலய உரிமையாளரும் இளைப்பாறிய மணியகாரருமாகிய திரு. ஆர். எம். சின்னையா நம்பிக்கைப் பொறுப்புச் சாதனம் மூலம் அவ்வூர்ப் பொதுமக்களுக்குக் கையளித்து வழிபடுவோர் மகாசபை பரிபாலன சபை ஆகியவை நிர்வாகத்தை முட்டின்றி நடாத்தவிதிமுறைகளை ஆக்கிக் கொள்ள வேண்டும், எனக்கேட்டுக் கொண்டதிற்கிணங்கப் பரிபாலனசபையால் தயாரிக்கப்பட்ட விதிமுறைகள் கடந்த24-ம் திகதிய சபைக்கூட்டத்தில் ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கூட்டத்தில் விசேஷ விருந்தினராகவும் ஆலோசகராவும் கலந்து கொண்ட சைவப் பெரியார் திரு. மு. வைரமுத்து பேசுகையில் ''ஆண்டவனின் சந்நிதானத்தில் நாம் ஒன்றுசேரும் பற்றுதவர்கள்; அவர் பணியில் ஈடுபடும் நாம் எமது சுயநலத்தை மறந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்; பிணக்குகள் வேறுபாடுகள் தலையெடுக்க விடக்கூடாது'' என்றார் திரு. எஸ் ரி. சண்முகநாதன் கூட்டத்துக்கு தலைமை வகித்தார். (அ)

## நாளை ரதோற்சவம்

யாழ்ப்பாணம், வியா.

நீர்வேலிவாய்க்கால்தரவைப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. காலைமுதல் மேளக் கச்சேரிகளும், இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறும். பிற்பகல் நடைபெறும நாதஸ்வரகலாநிதி பத்மநாதனின் நாதஸ்வரக் கச்சேரிக்கு பிரபல தென்னிந்திய தவில்வித்துவான்வலங்கைமான் சண்முகசுந்தரம் தவில் வாசிப்பார். இரவு 7-30 மணிக்கு நல்லை ஆதீனப் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாசார்ய சுவாமிகளின் மகாபாரத விரிவுரைத் தொடர் நடைபெறும். (அ)

## இன்றுநடக்கும் மரதனோட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் ஓர் அம்சமாக ஆறு மைல் மரதன் ஓட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. கல்லூரி வாசலிருந்து ஆரம்பமாகும் இப்போட்டி மூளாயூடாக மாவடிசந்தி சென்று சித்தன் கேணியை அடைந்து கல்லூரி வாசலில் முடிவடையும். அடுத்த மாத முற்பகுதியில் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெறும். (அ)

# முன்னாள்பதுளை எம்.பி. கைதாகி விடுதலை!

பதுளை, புதன்

ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களை தாக்க முயற்சிப்பதாக கிடைத்த புகாரின் பேரில் கைது செய்யப்பட்ட முன்னாள் பதுளை எம். பி திரு. பி. ஏச். பண்டார விசாரணைக் குட்படுத்தப்பட்ட பின் விடுதலைசெய்யப்பட்டார்.

இவருடன் இதே புகார் தொடர்பில கைதான இவரின் புதல்வரும் மற்றும் 11 பேரும் தொடர்ந்து றிமாண்டிவ்வைக்கப்பட்டுள்ளனர்.

வெற்றிவிழாவைத் கொண்டாடும் ஐ. தே. க ஆதரவாளர்களை தாக்க முயற்சிப்பதாக கிடைத்த பல புகார்களை தொடர்ந்தே இவர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர் பதுளை பொலிஸ் அதிபர் விசாரணை நடத்தினார்.

# பொலிசாருக்கு மா அதிபர் பாராட்டு

கொழும்பு, புதன்

பொதுத் தேர்தலுக்கு முன்னரும தேர்தல் முடிந்த பின்னரும் கஷ்டமான பணிகளைச் சிறப்பாக ஆற்றியமைக்காக பொலிசாருக்கு பொலிஸ்மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அக்காலப்பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட பொலிசார் எடுத்த சகல முயற்சிகளுக்கும் தாம் மதிப்பளிப்பதாகவும் அவர் தமது விசேட பாராட்டுச் செய்தியில் கூறியுள்ளார்.

தொடர்ந்து அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியில் பொலிசார் உஷாராகப் பணிபுரியவேண்டும் என்றும் திரு சேனநாயகா செய்தியில் கூறியுள்ளார். (இ)

# ''எங்களைச் சந்திக்க தரகர்கள் தேவையில்லை''

மாவனலல், புதன்

''சுதந்திரக்கட்சி ஆட்சியின் போது திறமையின் அடிப்படையில் வேலை வழங்கப்படவில்லை. விண்ணப்பதாரரின் திறமைக்குத்தான் முதலிடம் கொடுத்தனர் கூடுதலாக செலவழித்தவர்களுக்கே வேலை கிடைத்தது இப்படியான ஊழல்களை அரசாங்க இலாகாக்களில், குறிப்பாக ப நோ. கூ. சங்கங்களில் முற்றாக ஒழிப்போம்.''

அரநாயக்கா அங்கத்தவர் திரு. வசந்த உதயரத்தின தமக்களிக்கப்பட்ட வரவேற்பின்போது மேற்கண்டவாறு கூறினார்

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''சுதந்திரக்கட்சி படுதோல்வி அடைந்ததற்கு முக்கிய காரணம், அவர்கள் பொதுமக்களை மறந்ததுதான்.

(6-ம் பக்கம் பார்க்க)

# தென் ஆபிரிக்காவில் விடுதலை வீரர்களுக்கு உதவுவதே இந்தியாவின் இலட்சியம்

## வெளிநாட்டமைச்சர் கருத்து

பம்பாய், ஜூலை 27

''தென்னுபிரிக்காவில் விடுதலைக்காகப் போராடும் மக்களுக்கு மேலும் மேலும் உதவி செய்வதே இந்தியாவின் இலட்சியம்''

இவ்வாறு இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. பி. ஏ. வாஜ்பாயி பம்பாயில் கூறினார்.

தான்சானியா புறப்படுவதற்கு முன்னர் திரு. வாஜ்பாயி பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் மேலும் கூறியதாவது:

தென்னுபிரிக்க விடுதலை வீரர்களுக்கு உதவும் நாடுகள் நெருக்கமான ஒற்றுமையுடன் இயங்கவேண்டும். அப்போது தான் அவ்வீரர்களுக்கும் செய்யும் உதவிகள் வீண்போகாமல் இருக்கும்.

தென்னுபிரிக்க விடுதலைவீரர்களுக்கு மேற்கொண்டு என்ன உதவிகள்செய்யவேண்டும் என்பதை, உதவும் நாடுகள் ஆராய்ந்து உடன் செயலில் இறங்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (இ)

### மொரார்ஜிக்கு செருப்பு வீச்சு

புதுடில்லி, ஜூலை 27

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பயணம் செய்த காருக்கு வீதியில் நின்ற சிலர் செருப்புக்களால் வீசினராம்.

இது தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுடில்லியில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது. (இ)

### ரெட்டிக்கு ஜெ. பி. வாழ்த்து

புதுடில்லி, ஜூலை 27

இந்திய ஜனுதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. நீலன் சஞ்சீவ ரெட்டியைப் பாராட்டி இந்தியசர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ், ரெட்டிக்கு விசேஷசெய்தியொன்றை அனுப்பியுள்ளார்.


சோவியத் ஜனுதிபதி திரு. பிரஸ்னேவ், இலங்கை ஜனுதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ உட்பட பல வெளி நாட்டுத் தலைவர்களும் திரு. ரெட்டிக்குப் பாராட்டுச் செய்திகளை அனுப்பியுள்ளனர். (இ)

### புலவர் கோவிந்தனுக்கு பிணை

சென்னை, ஜூலை 27

தமிழ் நாடு சட்டசபையின் முன்னுள் சபாநாயகரும தற்போதைய தி. மு. க. சட்டசபை உறுப்பினருமான புலவர் கோவிந்தன் பிணையில் செல்ல

[5-ம் பக்கம் பார்க்க]



வேலர்: இந்த வதந்தி பரப்புகிறவர்களைப் பிழை சொல்லக்கூடாது.

மயிலர்: ஏன்?

வேலர்: அவைக்கு காதில் மெல்லிய செவிடு இருக்குப்போல. ''முறுக்குச் சுடுபடுகுது'' என்பதை ''மூன்று பேர் சுடுபட்டுப் போனுர்கள'' என்று மெல்லிய மாற்றத்தோடு சொல்லிப் போடுவினம்.

— சுந்தர்

## இலட்சியப் பயணத்தின் ஆரம்பக்கட்டத்தில் ஜனதா

### ஜெயப்பிரகாஷர் அறிக்கை

பட்னு, ஜூலை 27

இந்திய ஜனதா கட்சி தமது இலட்சியப் பயணத்தின் ஆரம்பக்கட்டத்திலேயே இப்போது இருக்கிறது என்று இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்துள்ளார்.

பட்னுவில் வெளியிட்டுள்ள எழுத்துமூலமான அறிக்கையிலேயே ஜெயப்பிரகாஷர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜனதா கட்சி இன்னும் ஓர் உறுதியான தேசியக் கட்சியாக உருவாகவில்லை என்றும் கூறிய ஜெயப்பிரகாஷர், ஜனதாவில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் தமது தனித்துவத்தை மறந்து ஜனநாயக ரீதியில் இணைந்துகொள்ள வேண்டும் என்றும் கூறினர்.

கட்சியில் உள்ள எவரும் தமது அதிருப்தியை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் தமக்குள்ளேயே பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர் ஜனதா கட்சியினரைக் கேட்டுக்கொண்டார். (இ)

## நீரிழிவுக்கும் செயற்கை உறுப்புச்சிகிச்சை!

மாஸ்கோ, ஜூலை 27

நீரிழிவுநோயாளிகளின் துன்பங்களைத் தீர்க்கக்கூடிய ஒரு புதிய சிகிச்சை முறையை மாஸ்கோவில் உள்ள மாற்று உறுப்புப் பொருத்தும் ஆய்வு நிலையம் கண்டுபிடித்துள்ளது. இந்த முறையில், இயற்கைக் கணையத்திற்குப் பதில் செயற்கைக் கணையம் பொருத்தப்படுகிறது. இத்தகைய செயற்கைக் கணையத்தை ஏற்கனவே ஒருவருக்கு அறுவைச்சிகிச்சை நிபுணர்கள் பொருத்தியுள்ளனர். இது பொருத்தப்பட்டது உலகத்திலேயே இது தான் முதல்முறையாகும்.

இன்சுலின் உற்பத்தி செய்யும் கணையம், ஊனம் அடைவதுதான் நீரிழிவு நோய்க்குக் காரணமாகும்,

இன்சுலின் இஞ்செக்ஷன் செய்யும் பழைய முறைக்கும் புதிய முறைக்குமிடையே ஒரு வித்தியாசமென்னவென்ருல், பழுதடைந்த கணையத்தின் பணிகளை, இஞ்செக்ஷன்மூலம் உடலில் செலுத்தப்படும் இன்சுலின் சரிவர ஒழுங்குபடுத்துவதில்லை. புதியமுறை அதை ஒழுங்காகச் செய்கிறது.

செயற்கைக்கணையத்தில் ஒரு நுண்ணிய எலெக்ட்ரானிக் பொருத்தப்பட்டுள்ளது; இந்த செயற்கைக் கணையம் ரசாயனப் பொருள்களாலும், உலோகக்கலவையாலும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில் சேமித்து வைக்கப்பட்டுள்ள இன்சுலின் சிறிதுசிறிதாக ரத்தத்தில் கலக்கிறது.

செயற்கைக் கணையம் விரைவில் பெரும் அளவில் உற்பத்தி செய்யப்படும்

### வாஜ்பாயி வாழ்த்து

புதுடில்லி, ஜூலை 27

இலங்கை வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றுள்ள ஜனுப் ஏ. ஸி. எஸ். ஹமீத்துக்கு, இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாயி வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

''இலங்கையின்வெளிநாட்டு அமைச்சராகப் பதவியேற்றுள்ள உங்களுக்கு எமது உளம்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கவிரும்புகின்றேன். உங்களின் நாட்டுக்கும் எமது நாட்டுக்கும் நீடித்த நட்பு இருந்துவருகிறது. இந்த உறவு மேலும் நெருக்கமாகும் என்று எதிர்பார்ப்போமாக. உங்களது முயற்சிகள் வெற்றி பெறவாழ்த்துகின்றேன்'' என்று தமது செய்தியில் திரு. வாஜ்பாயி குறிப்பிட்டுள்ளார்.

### எதிர்ப்பு

கான்பரா, ஜூலை 27

ஆஸ்திரேலியாவின் கிப்ஸ்லண்ட் பிரதேசத்தில் 'ஒமேகா' கடற்படைத் தளத்தை நிர்மாணிப்பதற்கு அமெரிக்கா உத்தேசித்திருப்பதற்கு இங்கு எதிர்ப்பு வலுத்து வருகின்றது.

'ஓமேகா எதிர்ப்பு கிப்ஸ்லண்ட் கமிட்டி' என கிப்ஸ்லண்ட் பிரதேசத்தில் ஒரு கமிட்டி உருவாகியுள்ளது.

''எமது பிரதேசத்தில் அமெரிக்கா இத்தகைய கடற்படைத் தளமொன்றினை நிர்மாணிக்க உத்தேசித்திருப்பதனையிட்டு நாம் கலையடைந்துள்ளோம். இத்தளத்தினை நிர்மாணிப்பதற்கான முஸ்தீபுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்'' என மேற்படி கமிட்டியின் செயலாளர் விலியாதியேஸே ஆஸ்திரேலிய அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

## ஜனதா அரசு ஹரிஜனருக்கு எதிரானதாம்

### கட்சி உறுப்பினர்களிடம் அமைச்சர் வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 27

ஜனதா அரசாங்கம் ஹரிஜனர்களுக்கு எதிராக இயங்குகிறது என்ற குற்றச்சாட்டு நாட்டில் வேகமாகப் பரவிவருகிறது. இதுகுறித்து ஜனதா கட்சி உறுப்பினர்கள் உஷாராக இருக்கவேண்டும் என்று உள்துறை அமைச்சர் திரு. சரண்சிங் ஜனதா கட்சி உறுப்பினர்களைக் கேட்டுள்ளார்.

ஜனதா கட்சி அரசு குறிப்பாக உள்துறை அமைச்சர் ஹரிஜனர்களுக்கு எதிரான கொள்கைகளை உடையவர் என்று இப்போது பொதுவாக கருதப்பட்டுவருவதாகவும் இதுபற்றி ஜனதா கட்சி உறுப்பினர்கள் ஆலோசித்து இக்கருத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும் திரு. சரண்சிங் கூறினர். (இ)

## எதேச்சாதிகாரத்தை நிலைநாட்ட இந்திரா மீண்டும் முயற்சிக்கிருராம்

### மார்க்ஸிய கம்யூ. தலைவர் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஜூலை 27

முன்னுள்இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது 10 ஆண்டு கால எதேச்சாதிகார கட்டமைப்பை மீண்டும் நிலைநாட்ட முயற்சித்து வருகிருர்.

இவ்வாறு இந்திய மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. நம்பூதிரிபாத் குற்றம்சாட்டியுள்ளார்.

திருமதி இந்திராகாந்தி அண்மையில் பி. பி. ஸி. நிருபருக்கு அளித்த பேட்டியும் சில மேடைகளில் ஆற்றிய உரைகளும் அவரின்மேற்கூறப்பட்ட கொள்கையை நிரூபிக்கின்றன என்றும் திரு. நம்பூதிரிபாத் தெரிவித்தார்.

தமது கட்சியில் இழைக்கப்பட்ட அநீதிகளை திருமதி காந்தி ஒப்புக்கொண்டபோதிலும் அவர் அச்செயல்கள் ஒவ்வொன்றையும் ஆதரிக்கிருர் என்றே தெரிகிறது என்றும் திரு நம்பூதிரிபாத் கூறினர்.

திரு. நம்பூதிரிபாத் மேலும் கூறியதாவது!

கட்டாய கருத்தடையின்போதும் வேறுசந்தர்ப்பங்களிலும் இறந்தவர்கள் கொலையுண்டவர்கள் பற்றி இதுவரை திருமதி காந்தி ஓர் அனுதாபவார்த்தைகூட தெரிவிக்கவில்லை.

இந்தியாவில் ஆங்கிலஆட்சியின்போது இழைக்கப்பட்ட அநீதிகளை விட நெருக்கடிநிலையின்போது படுமோசமான அநீதிகள் இழைக்கப்பட்டதாகவும் திரு. நம்பூதிரிபாத் தெரிவித்தார். (இ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்

## அக்டோபரில்

### ஒரேநாளில் நடக்கும்

**கொழும்பு, புதன்**

**நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அக்டோபர் மாதத்துக்கு முன்னர் தேர்தல்கள் நடைபெறும்.**

நாடு முழுவதும் மொத்தம் 722 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இந்த உள்ளூராட்சி மன்றங்களில் 8.415 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் 4 ஆண்டுகளாக இருந்தபோதிலும் 1971-ம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு உள்ளூராட்சி மன்றத்துக்குக்கூட தேர்தல் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி அமைச்சராக திரு. ஆர். பிரேமதாசா பதவியேற்றதைத் தொடர்ந்துமுதல் நடவடிக்கையாக, எல்லா உள்ளூராட்சி மன்றங்களையும் கலைத்ததுடன் இவற்றின் நிர்வாகப் பொறுப்பை விசேஷ ஆணையாளர்களிடம் ஒப்படைத்துள்ளதுடன், தேர்தல்களைத் தாமதமின்றி நடத்தவும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.

நாட்டில் மொத்தம் 722உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றில் 12 மாநகரசபைகளும், 38 நகரசபைகளும், 83 பட்டணசபைகளும், 589 கிராமச்சபைகளும் இருக்கின்றன.

நாட்டின்சரித்திரத்தில்முதல் தடவையாக சகல உள்ளூராட்சி மன்றங்களினதும் தேர்தல்களை, பொதுத்தேர்தலைப் போல ஒரேநாளில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இதுசம்பந்தமாக விரிவான ஏற்பாடுகளைச் செய்யும்பொருட்டு தேர்தல் ஆணையாளர் திரு. பீலிக்ஸ் டயஸ் அபேசிங்கா, அமைச்சர் பிரேமதாசாவை அடுத்த சில தினங்களில் சந்திப்பார்.

### 25 சத திட்டம் ரத்தாகும்

கொழும்பு, புதன்

அரசினர் வைத்தியசாலைகளில் மருந்துவாங்க வரும் வெளிநோயாளர்களிடமிருந்து அறவிடப்படும் இருபத்தைந்துசத முத்திரை வசூலிக்கும்திட்டத்தை அரசாங்கம் ரத்துச் செய்யவிருக்கிறது.

இது சம்பந்தமான முடிவை அரசாங்கம் இவ்வாரம் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## 'ஒன்றுபட்டதமிழர்சமுதாயம் அமைக்க நடவடிக்கை எடுக்கவும்'

அரியாலை,புதன்

'எண்பதுசதவீத உயர்சாதி மக்கள் வாழுகின்ற உடுப்பிட்டித்தொகுதியில் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த திரு. த. இராசலிங்கத்தைத் தமிழர்விடுதலைக்கூட்ட ணியின் அபேட்சகராக நிறுத்தி, சாதியின் பெயரைச்சொல்லி வாக்குக்கேட்ட வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளிலும் பார்க்க சுமார் 15 ஆயிரம் அதிகப்படி வாக்குகளால் வெற்றிவாகை சூடச்செய்த தமிழர்விடுதலைக் கூட்டணியினருக்கும், அதற்காகத் தம்மை அர்ப்பணித்து உழைத்த இளைஞர் பேரவையினருக்கும், விசேஷமாக சாதி வேற்றுமையை முற்றாக ஒழித்துக்கட்டவேண்டுமென்றஉறுதியுடன் ஒன்றுபட்டு திரு இராஜலிங்கத்தின் வெற்றிக்காக வாக்களித்த உடுப்பிட்டித்தொகுதியில் வாழும் சகல இன மக்களுக்கும் மகாசபை நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறது'.

இவ்வாறுகோரும் தீர்மானம் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் பொதுநிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாகியப்பிட்டியில் மகாசபையின் உபதலைவர் திரு. பி. ஏசேக்கியல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 'தமிழ் ஈழத் தொகுதிகளில் போட்டியிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களில் 17 பேர் பிரமிக்கத்தக்க அளவில் தமிழ்மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றியீட்டியுள்ளதையும், தமிழ்பேசும் மக்கள் ஏகோபித்த ஒரேகருத்துடன் ஒன்றுபட்டு வாக்களித்து வெற்றிபெறச் செய்தமையையும் இம்மகாசபை பாராட்டுகிறது. இதே நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்த தமிழ்பேசும் மக்களின் பூரண ஆதரவுடன் வடபகுதியில் ஆங்காங்கே காணப்படும் சாதிப் பூசல்களுக்குத் தூபமிடும் சம்பவங்களை நிறுத்த உடன் தீவிர நடவடிக்கை எடுத்து தமிழ்பேசும் மக்களை இன-மத-சாதிபேதமற்ற சமுதாய அமைப்பில் சேர்ந்து ஒன்றுபட்ட தமிழர் சமுதாயத்தை அமைக்க நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியை இம்மகாசபை கோரு

(5 ம் பக்கம் பார்க்க)

### 57,69,706 பேர் வாக்களிப்பு!

கொழும்பு, புதன்

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், 87.2 சதவித வாக்களிப்பு நடந்ததாக தேர்தல் ஆணையாளர் திரு. பீலிக்ஸ் டயஸ் அபேசிங்க தெரிவித்துள்ளார்

இம்மாதம் 21ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில், வாக்களிக்கத் தகுதிபெற்றோரின் மொத்த எண்ணிக்கை, 66,17,894 ஆகும், இத்தொகையில் 57,69,706 பேர் வாக்களித்திருக்கின்றனர்.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்ட பொத்துவில் தொகுதியில் மொத்த வாக்காளர் எண்ணிக்கை 49,691.

### வாழ்த்தும் கோரிக்கையும்

அரியாலை, புதன்

புதிய பிரதமர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், புதிய அமைச்சரவைக்கும் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபைஅனுப்பிவைத்துள்ள வாழ்த்துச்செய்தியில் தங்களின் தலைமையின்கீழ் நாடு முன்னேற்றத்தையும், சுபிட்சத்தையும் நோக்கிப் பீடுநடை போடவேண்டுமென்றும் தமிழ்பேசும் மக்களின் சகல உரிமைகளும் அரசியல் சாஸனத்தில் இடம்பெறவேண்டுமென்றும், தமிழ்மக்களின் சகல உரிமைகளையும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## "விடுதலை வேட்கையை மக்கள் காட்டிவிட்டனர்"

—சுயாட்சிநவம்

வண்ணார்பண்ணை, புதன்

''தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த வெற்றி அதன் இலட்சியத்திற்குக் கிடைத்த வெற்றியென்றே கொள்ளவேண்டும். சுயாட்சிக் கழகமும் அதனை ஏற்றுகொண்டு மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்குகிறது வெற்றி வெற்றிதான் தோல்வி தோல்விதான்.''

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவர் தமது செய்தியில் மேலும்தெரிவித்துள்ளதாவது:

''வடமாகாணத்தில் வாலிபர்களும் ஆசிரியர் சங்கங்களும் அரசாங்க ஊழியர் சங்கங்களும் சேர்ந்து உழைத்து கூட்டணிக்கு ஈட்டிக்கொடுத்த வெற்றியானது சிங்கப்பூரிலே லீகுவான் யூ கட்சிக்கும்,கிழக்கு வங்காளத்தில் முஜிபுர்ரஹ்மான் கட்சிக்கும் கிடைத்த வெற்றிகளைப் போன்றது. அடுத்தது என்ன? இந்த வெற்றியை எப்படிப்பயன் படுத்தப்போகிறார்கள்? என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன. வழமையான பாராளுமன்ற அரசியல் விளையாட்டுக்களில் காலத்தைக் கழிக்கப் போகின்றனரா. அல்லது தமிழ் ஈழம் அமைப்போம் என்று தேர்தலில் முன்வைத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு உருப்படியான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றார்களா என்பதைப் பொறுமையுடன் இருந்து பார்ப்போம். மக்கள் சம்மதத்தை உலகுக்கு எடுத்துக்காட்டச் சொன்னோர்கள், எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லாத முறையில் மக்கள் காட்டிவிட்டார்கள். சுயாட்சிக் கழகத்திற்கு ஆதரவு தரமறுத்தபோதும், மக்கள் தங்கள் விடுதலை வேட்கையை இவ்வாறு வெளிக்காட்டியதைப் பாராட்டி வரவேற்கிறேன்.

''தமிழ் ஈழம் வெள்ளித் தாம்பாளத்தில் வைத்துத்தரப் படமாட்டாது; பாராளுமன்றப் பிரேரணைகளால் கிடைக்காது என்பதை தமிழ் இளைஞர்களும் தலைவர்களும் என்று உணர்கிறார்களோ அன்றுதான் விடுதலை நிச்சயமாகும். இதை வலியுறுத்தித் தமிழர் சுயாட்சிக்கழகம் தொடர்ந்து பாடுபடும்.'' (அ)

## ஞானவைரவர் கோயிலில் திருட்டு!

யாழ்ப்பாணம்,வியா

அமரர் டாக்டர் சண்முகரத்தினத்தின் மருந்தகத்துக்கு அருகாமையிலுள்ள வண்ணை ஸ்ரீஞானவைரவர் ஆலயத்திலுள்ள வெளிமண்டபத்திலிருக்கும் முருகன் கோவிலில் திருட்டு நடைபெற்றுள்ளது. இக்கோவிலின் கதவுகளை உடைத்து ஐம்பொன்னலான பாலமுருகன் சிலையையும், பீடம், திருவாசியிலுள்ள வெள்ளியிலான வேல்பெருமானையும் ஒரு வெள்ளிமுலாம் பூசப்பட்ட திருவாசியையும் மற்றும் இரண்டு தூண்டா மணிவிளக்குகள், கோபுரமுடி, பித்தளைப்பாதக் கமலம், தீபக்கால் முதலியவற்றையும் கடந்த ஞாயிறு இரவு சில விஷமிகள் திருடிச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இத்திருட்டைத் துலக்குவதில் பொலிஸ் நாய்கள்பயன்படுத்தப்படுகின்றன. யாழ் பொலிசார் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

இப்பொருட்களை எவராவது விற்பனைக்குக் கொண்டுவந்தால், அல்லது இதுசம்பந்தமான தகவல் கிடைத்தால் உடனடியாக யாழ். பொலிசாருடன் அல்லது 'ஈழநாடு' அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.





கிரமக்சோன்

வெங்காயம், மிளகாய்ப் பயிர்களைத் தாக்கும் புழுக்களைக் குறைப்பதற்கு உதவுகிறது.

உங்களது வெங்காயத்திற்கு மருந்து தெளிக்கும் போது அங்குள்ள புழுக்கள், வயலைச் சுற்றியுள்ள களைகளை நாடுகின்றன. கிரமக்சோன் பாவித்து வயலைச் சுற்றியுள்ள களைகளைக் கட்டுப்படுத்தி, களைகளில் உள்ள புழுக்கள் திரும்பவும் பயிரைத் தாக்காது காப்பாற்றுங்கள்.

CIC கெமிக்கல் இண்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்.
த. பெ. இலக்கம் 352 கொழும்பு 1.

**சாந்தி** யாழ். நகர் போன்: 7642 தினசரி 10-30, 9-30, 6-30, 9-45

ரவிச்சந்திரன் - வாணிஸ்ரீ-பாரதி - நாகேஷ்

கருணாநிதியின்

**தங்கத்தம்பி** (புதியபிரதி)

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.

CRAZY BOYS and

THE QUEEN'S NECKLACE

(Color-Scope)

மகத்தான 2-வது மாதம்

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - பத்மபிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த

ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**

(ஈஸ்ட்மன் கலர்)

**வெலிங்டன்** [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்

விஜயகுமார் — ஜெய்சித்ரா

**தாய் இல்லாக் குழந்தை**

**லிடோ** போன்: 7693 (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ஜெய்சங்கர் — சுஜாதா

**நீ ஒரு மகாராணி**

**ராஜா** (யாழ்நகர்) போன்: 7180 82-வது தினம் தினசரி 4 காட்சிகள்

தேவரின் **திருவருள்** (ஈஸ்ட்மன்கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

கடைசிவாரம்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த

ஜெயேந்திரா மூவிஸ்

**காத்திருப்பேன் உனக்காக**

**REGAL** (JAFFNA) Daily at 4-45, 7-00 & 9-30 p. m. only

NORMAN WISDOM IN

**"ON THE BEAT"**

FULL COMEDY

85-வது நாள்

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த

**நாளை நமதே**

(ஈஸ்ட்மன் கலர்)

**மனோகரா** [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்

சிவாஜி—உஷாநந்தினி

**பொன்னூஞ்சல்**

30-7-77 முதல்

எம். ஜி. ஆர் - லதா நடித்த

**உழைக்கும் கரங்கள்**


பருத்தித்துறை
பல நோக்குக்
கூட்டுறவுச்சங்கம்
(மட்டுப்படுத்தப் பட்டுள்ளது)
பருத்தித்துறை

## பகிரங்க ஏலவிற்பனை

பருத்தித்துறை பல. நோ கூ. சங்கத்தின் மொத்த விற்பனைக் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 5000 வெற்றுச்சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 6-8-77-ந் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்குச் சங்கக் கட்டிடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலக் கூற்றில் வெற்றி பெறுவோர், ஏலக்கூற்றில் பெற்ற பொருட் பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்று தமக்குரிய பொருட்களை உடனேயே ஏற்றிச்செல்லல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
25-7-77. 6725

## சபைமுதல்வர் பிரேமதாசா

கொழும்பு, புதன்
ஐக்கியதேசியக் கட்சியின் உபதலைவரும், உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. ஆர். பிரேமதாசா தேசிய அரசுப் பேரவையின் சபைமுதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினல் வழங்கப்பட்ட இந்த நியமனம் குறித்து திரு. ஆர். பிரேமதாசா, நேற்று கருத்து வெளியீடுகையில் மக்களுக்கு தூய்மையான சேவையாற்ற தமக்கு மற்றுமொரு சந்தர்ப்பம் கிடைத்திருப்பதையிட்டு பெருமைப் படுவதாகக் கூறினர்.

## புலவர்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டார்.

நேற்று மத்திய புலனாய்வுத் துறை பொலிசாரால் கைது செய்யப்பட்ட இவர் சென்னை மாஜிஸ்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (இ)

## ஒன்று—

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது' என்றுகோரும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

மகாசபையின் கல்விச் சகாய நிதிக்காக அடுத்த மாதம் 6-ந் திகதி உடுவில் திறந்தவெளியரங்கில் நாடக விழாவொன்றை நடத்துவதென்றும், இவ்விழாவில் சமீபத்தில் சமாதான நீதிபதிகளாக நியமனஞ்செய்யப்பட்ட வைத்தியகலாநிதி க. ஜோர்ஜ். எஸ். அருச்சுனன் ஆகியோரைக் கௌரவித்துப் பாராட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. (அ)


**வெஸ்லி**

(மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30

சனி, ஞாயிறு 2-30

ஜெமினி, சரோஜாதேவி

**தாமரை நெஞ்சம்**

**நாகமஸ்**

(சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

ஜெமினி-ஏ.வி எம். ராஜன்

**வீர அபிமன்யு**

**புலோலி சினிமாஸ்**

(பருத்தித்துறை)

தினசரி 4-30, 7-00 & 9-30

James Bond Sean-Connery

**RANSOM**


# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கிளிநொச்சி உருத்திரபுரம் ரோட், எட்டாம் வாய்க்கால், 5 சந்தி முன்பாய் உள்ள ¼ ஏக்கர் தென்னையும், மா, பலா, கிணறு, கடை கட்ட, மில் போடவும் சகலவசதிகளுடன். G. J. 48/82, இராசாவின் தோட்டம் ரோட், யாழ்ப்பாணம், 6727

## இலங்கைப் பல்கலைக்கழகம்

### யாழ்ப்பாண வளாகம்

மனிதப் பண்பியற் பீடத்தைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும், மூன்றும் வருட கணிதம் / புள்ளிவிபரவியல் மாணவர்களுக்கும் 01-08-77-ஆந் திகதி யாழ்ப்பாணவளாகம் மீளத் திறக்கப்படும். விஞ்ஞான பீடத்தில் பயிலும் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும், முதலாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் மீளத் திறக்கப்படும் திகதி பின்போடப்பட்டுள்ளது வட்டுக்கோட்டையிலுள்ள விடுதிகளில் உணவு வழங்கல் ஒழுங்குகள் பற்றி முடிவு செய்யப்பட்டதும் புதிய திகதி அறிவிக்கப்படும்.

தலைவர்

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
26-07-1977. 6724

## நாளை சங்காபிஷேகம்

(சித்தன்கேணி)

சித்தன் கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய மகா சங்காபிஷேகம் நாளை நடைபெறுகிறது.

பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும் இரவு விசேட மேளக்கச்சேரி, சமயச் சொற்பொழிவு, வில் லிசை ஆகியன இடம்பெற்று, சுவாமி மூன்றும் வீதி உலா வருவார். (இ)

### தேவை

யாழ். மாநகர் எல்லைக்குள் வாடகைக்கு முழு வீடாவது பகுதியாவது தேவை. முற்பணம் கொடுக்கலாம். ஜோக்கிம், பதுவை, பண்டத்தரிப்பு. 6722

யாழ்ப்பாண எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய நவீன வீடு வாடகைக்கு அல்லது வாங்குவதற்குத் தேவை. விபரங்களை, கீழ்க்காணும் முகவரிக்கு எழுதவும். விளம்பர இல: 6718, மே/பா. 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 6718

புடவைக் கடைக்கு ஏற்ற நல்ல நிலையிலுள்ள அலுமாரிகள், சோக்கேஸ்கள் ஆகியன தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: 6729, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6729

ஐந்துசந்தி, வண்ணார் பண்ணை, கொட்டடி, ஓட்டுமடம் தட்டாதெரு, சிவன் கோவில் வீதிக்கருகாமையில் வீடு வாடகைக்குத் தேவை. கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6731, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6731

N. C. G. E. வகுப்பிற்கு விஞ்ஞானம் கற்பிக்க இரசாயனம், உயிரியல் தராதரப் பத்திரமுள்ளவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். சிவா கல்வி நிலையம், திருநகர், கிளிநொச்சி. 6730

### பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-ல் ஆரம்பமாகவுள்ளது. விபரங்களுக்கு; இன்ஸ்டிரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B. ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 6686

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில்

வழ: இல. ஈடு/12511

1. இளையதம்பி கனகசபையும் பெண்
2. பொன்னம்மாவும், இருவரும் புங்குடுதீவு.

எதிராக

வழக்காளிகள்

நாகேந்திரர் கந்தையா கைம் பெண் மாரிமுத்து, குறிகாட்டுவான், புங்குடுதீவு மேற்கு.

எதிராளி

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் M. B/12511-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ந் திகதி திங்கட்கிழமை (1977-08-22) முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபாய் 2000/-வும் மேலும் ரூபா 1000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1971-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 21-ந் திகதி வரையுமான வட்டியும். அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 641 சதம் 61 இதில் நடைபெற்ற செலவு ரூபா 462 சதம் 02. நடைபெறவேண்டிய செலவு ரூபா 107 சதம் 32 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 72 சதம் 27 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப் பகுதி புங்குடுதீவுக் கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை.

''ஆலடியிற் புலத்திற்கு வடக்கு'' நில. பர 30தில் இதில் மேற்குப்புறமாக நில பர. 22 நீக்கி மிகுதி கிழக்குப்புறமாக நில. பர. 8ம் கிணறும் செய்பயிர் வாளபயிர்களும் எல்லை கிழக்கு: சரவணமுத்து பெண் நாகமுத்துவின் ஆதனம், வடக்கு: ரோட்டும் மறுபேருக்கும் உரிய ஆதனம், மேற்கு: கந்தையா பெண் நாகம்மாவின் ஆதனம், தெற்கு: சின்னத்தம்பி கைம்பெண் வள்ளியம்மைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் இதடங்கலும்.

ஏ. ப. பி. எதிர்மன்னசிங்கம்,
வெந்திஸ் கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

107, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
20-06-77. 6714

ஈழநாடு
The EELANADU

# நாட்டு மக்களுக்கு பிரதமர் இன்று விடுக்கும் செய்தி

கண்டி, வியா.

மலையகத்தலை நகரம்கண்டி மாநகருக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று பிற்பகல் 2-30க்குநாட்டுமக்களுக்கு விசேஷஉரைநிகழ்த்துவார். இதனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம் நேரடியாக மும்மொழிகளிலும் அஞ்சல்செய்யும்.

பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று விடுக்கும் செய்தியில், வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்க அரசு மேற்கொள்ளப்போகும் உடனடி நடவடிக்கைகள் பற்றியும் தெரிவிப்பார்

பிரதமரின் செய்தி, அரசின் கொள்கையையும் பல்வேறு நடவடிக்கைகளையும்பிரதிபலித்திருக்கும் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## 'ஜவுளிவிலைகளைக்குறைக்க உடன் நடவடிக்கை'

—அமைச்சர்

கொழும்பு, புதன்

ஜவுளிகளின் விலைகளைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று புடவை கைத்தொழில் அமைச்சர் திரு. விஜயபால மெண்டிஸ், பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

புதிய அமைச்சர் திரு. விஜயபாலமெண்டிசுக்கும் உதவி அமைச்சர் திரு. ஆர். எம். தர்ம தாச பண்டாவுக்கும் அமைச்சு ஊழியர்களால் வ வேற்பு அளிக்கப்பட்டது.

இவ்வரவேற்பைத் தொடர்ந்து நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய அமைச்சர், திரு. விஜயபால மெண்டிஸ் கூறியதாவது:-

"ஜவுளிகளின் விலை இன்று பெருமளவில் அதிகரித்துள்ளது நூல்கள் இறக்குமதி முதல் ஒவ்வொரு கட்டமாக துணிகள் விற்பனைசெய்யப் படும்வரை, இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இப்படியான ஊழல்களை ஒழித்துக் கட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்"

[க-அ[

## மீன் விலையும் குறையும்

கொழும்பு, புதன்

மீனின் விலையை உடனடியாகக் குறைக்க ஒரு திட்டம் தயாரிக்கும்படி, மீன் பிடி அமைச்சர் திரு. எஸ். டி. எஸ். ஜெயசிங்கா, தமது அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார். (க-அ)

## இவர் யார்?

காங்கேசன்துறை, புதன்

கீரிமலைக் கடலில் நீரில்மூழ்கி தத்தளித்துக்கொண்டிருந்த ஒருவர் பொதுமக்களாலும் பொலிசாராலும் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் உயிரைக்காப் பாற்றமுடியவில்லை

இவர் தவறுதலாக சுளியில் மாட்டிக்கொண்டாரா அல்லது தற்கொலைசெய்ய முயற்சிசெய்தாரா என்பது தெரியவில்லை.

கடற்கரையில் இவரது மேற்சட்டையும் சதுரக்கோடு போட்ட சாரமும் காணப்பட்டதாம்.

கறுப்புநிறமான சுமார் 25 வயது மதிக்கத்தக்க இவர் தமிழராய் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அடையாளம் காணப்படுவதற்காக இவரது சடலம் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

## தாராளமாக—

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமைச்சரவை முடிவு செய்தது.

### ஒழுக்கநெறிக் கோவை

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்குமென ஒழுக்கநெறிக் கோவையொன்றை உருவாக்க வேண்டும் என்றும் அமைச்சர் சபை முடிவுசெய்தது.

உபசாரங்களில், விருந்துகளில் பங்குபற்றுவதற்கென ஒரு அமைச்சரை நியமிப்பது என்பது இந்த ஒழுக்க நெறிகளில் ஒன்றாகும்.

பொலிஸ் அதிகாரி ஒருவரை இடமாற்றம் செய்வதாயின் பொலிஸ் ம அதிபரின் அல்லது வேறு பொலிஸ் உயர் அதிகாரியின் சம்மதத்தைப் பெற வேண்டும் என்ற நிலை இனிஇருக்கா இம்மாதிரியான கோரிக்கைகள் நேரடியாக பிரதமமந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அதன்மீது அவர் நடவடிக்கை எடுப்பார்.

### ஆகஸ்ட் 4-ல் சபை கூடும்

ஆகஸ்ட் 4ம் திகதி தேசிய அரசுப் பேரவையை சம்பிரதாயப்படி கூட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

# பிரதமருக்கு கண்டியில் மகத்தான வரவேற்பு

## நகர் விழாக்கோலம் பூண்டது

கண்டி, புதன்

கண்டி மாநகருக்கு இன்று காலை 11 மணிக்கு விஜயம் செய்த புதிய பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு கண்டியில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கண்டி அல்கிரிய திடலில் பிரதமரின் ஹெலிகொப்டர் சென்று இறங்கியபோது. மகாநுவர எம். பியும் விவசாய காணி அமைச்சருமான திரு. ஈ. எல். சேனநாயக்கா பிரதமரை வரவேற்றார்.

அத்திடலிலிருந்து பிரதமரும்



தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. டி. பி. விஜயதுங்கா, திரு. ஈ. எல். சேனநாயக்கா ஆகியோரும் கண்டி ஜனாதிபதி மாளிகைக்கு திறந்த 'ஜீப்'பில் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

வழிநெடுகிலும் பெருந்திரளான மக்கள் குழுமிநின்று பிரதமரை வரவேற்றனர்.

கண்டிநகர்தேசிய, பௌத்த, பச்சைக்கொடிகளாலும், மகர தோரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது.

### 'மகாமலுவ'ஒப்படைப்பு

கடந்த அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட 'மகாமலுவ' மண்டபத்தை, தலதா மாளிகையிடம் மீண்டும் ஒப்படைப்பது தொடர்பாக கண்டியில் நடைபெறும் சமய நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்பொருட்டு கண்டிக்குச் சென்ற பிரதமர், நாளை வியாழக்கிழமை பகல் 2-30 மணிக்கு தலதா மாளிகையின் எண்கோணமண்டபத்திலிருந்து நாட்டு மக்களுக்கு விசேட உரை ஒன்றை நிகழ்த்துவார்.

கல்வி அமைச்சரும் தலதா மாளிகையின்தியவதன நிலமேயுமான திரு. நிஸங்கா விஜயரத்தினவிடம் பிரதமர் நாளை 'மகாமலுவ' மண்டபத்தை ஒப்படைப்பார். (இ)

## இன்று அமிர்—திரு இருவருக்கும் வரவேற்பு

சித்தங்கேணி, வியா

காங்கேசன்துறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. அ அமிர்தலிங்கத்துக்கும், வட்டுக்கோட்டை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவுக்கும் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வட்டுக்கோட்டை கலைநகர் மக்கள் வரவேற்பளிக்கவிருக்கின்றனர் வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோவில் வீதியில் இந்த வரவேற்புக் கூட்டம் நடைபெறும்.

தமிழர் கூட்டணி தேசிய அரசிப்பேரவை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்வர் என்று தெரிகின்றது.

## "எமது கோரிக்கை எதிர்க் கட்சியில் ஒலிக்கும்"

யாழ்ப்பாணம், வியா.

"தமிழர் தனிநாட்டுக் கோரிக்கை ஆட்சிமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்து ஒலிக்க விடுதலைக் கூட்டணி முடிவு செய்யும். அந்நேரத்தில் எது கோரிக்கைக்கு உலக நாடுகளின் தார்மீக ஆதரவு கிடைக்கும்" என்று ஊர்காவற்றுறைத் தேசியப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், புங்குடுதீவில் தமது ஆதரவாளர்கள் மத்தியில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், புங்குடுதீவு மக்களின் இன்றைய பிரச்னையான குடிநீர் விஷயம்பற்றி தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணும் வேளையில் அரசாங்க அதிபர் திரு. விஜயபாலாவிடம் தாம் பேசியதாகவும், கூடியவரை இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்குத் தாம் முயற்சி செய்துவருவதாகவும் அரசாங்க அதிபரது உத்தரவு கிடைத்ததும், லொறிமூலம் விநியோகிக்கப்படுமென்றும் சொன்னார்.

தேர்தல் குரோதங்களை மறந்து யாவரும் தமிழ் ஈழ இலட்சியத்தை வென்றெடுக்க ஒன்றுபட்டுப் போராட முன்வர வேண்டுமென்றும் அவர் கூறினார். (கெ-அ)

யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்க

## நெறியாளர் குழு நியமன உறுப்பினர் பதவிகள் ரத்து

யாழ்ப்பாணம், வியா

யாழ். மாவட்டத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுவிலுள்ள நியமன உறுப்பினர்களின் பதவிகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். நாகலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

இவர்களின் நியமனங்கள் ரத்து செய்யப்பட்ட கடிதங்கள் நேற்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு. நாகலிங்கம் மேலும் கூறியதாவது: ஒவ்வொரு ப. நோ. கூ. சங்கங்களுக்கும், அந்தந்தப்பகுதி உதவி அரசாங்க அதிபர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் அந்தச் சங்கத்தில் கடமையாற்றும், கூட்டுறவு உத்தியோகத்தரும் மற்றொரு கூட்டுறவு உத்தியோகத்தரும் நெறியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த மூவருடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட 5 நெறியாளர்களும் தொடர்ந்து பதவியில் இருப்பார்கள்?

## எங்களை—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மகாராஜாக்களைப் போல் வாழ்ந்து சுகபோகங்களை அநுபவித்துவந்தார்கள். ஊழல் சக்கரவர்த்திகளாக விளங்கிய . தரகர்களின், ஆதரவுடன ஆட்சி நடத்தி வந்த படியால்தான் இந்த நிலை ஏற்பட்டது. இப்படியானநிலை எமது ஆட்சியில் ஏற்படாது.

"எமக்கு தரகர்கள் தேவையில்லை. மக்கள் நேரடியாக வந்து எந்தநேரத்திலும் எங்களை சந்தித்து தங்கள்குறைகளை தெரிவித்துக் கொள்ளலாம் நேரடியாக வந்து சந்திப்பதற்கு வாக்காளர்களாகிய உங்களுக்குஉரிமை இருக்கிறது

## தமிழ்நாடு—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் பெறுவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்றும் திரு. அன்பழகன்வற்புறுத்தினார்.

கர்நாடகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் தண்ணீரைத் தமிழ் நாட்டின் உரிமை என்ற முறையிலேயே பெறவேண்டும் என்று வற்புறுத்திய அவர் அங்கிருந்து பெறுந் தண்ணீருக்கு பதிலாகமின்சாரம்வழங்கும்ஏற்பாட்டைகண்டித்தார்.

கேள்வி நேரத்தின் போது அரச ஊழியர்களுக்கான மூன்றாவது ஊழிய சபை விரைவில் நியமிக்கப்படும் என்று நிதி அமைச்சர் திரு. மனோகரன் அறிவித்தார்.

அடையாறில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்து பற்றி பல உறுப்பினர்கள் ஒத்திவைப்பு தீர்மானங்கள் கொண்டுவந்தனர் முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரன் பதிலளிக்கையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கவும் தற்காலிக இடவசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், தீவிபத்தில் எவரும் உயிரிழக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

## தொழிற் சங்கம் வாழ்த்து

யாழ்ப்பாணம், வியா.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சி பெருவெற்றி ஈட்டியதற்கும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பிரதமரானதற்கும் வாழ்த்துத் தெரிவித்து அரசாங்க சுகாதார சேவை பொது ஊழியர் சங்க உதவிப் பொதுச் செயலாளர் திரு. கே. செல்வராஜா பிரதமருக்குத் தந்தி அனுப்பிவைத்துள்ளார். (அ)

......

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

மண்டைதீவு, புதன்

மண்டைதீவு உதயசூரியன் சனசமூக நிலையத்தின 28-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் தலைவர் திரு கு. க நடராசா தலைமையில் நடைபெற்றது பின் வருவோர் ஆட்சிக்குழுவுக்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; ச. இரத்தினகுமாரன், உபதலைவர்கள்: மா. இராசலிங்கம், அ. ஜெயகுணதிலகம். பொதுச்செயலாளர்: தி. மகேந்திரன், உபசெயலாளர்கள்; க. குலசிந்தாமணி, சி கோகுலபாலன், பொருளாளர்: அ. சிறீபத்மராசா, உபபொருளாளர்; ச. செந்தில்மணி, ஆட்சிக்குழு உறுப்பினர்கள்: வீ. சோமசுந்தரம, க. கனகசபாபதி, கு. சிவகுலசிங்கம், செ. தருமராசா, சி. வைரவநாதன், ஆ சந்திரசேகரன், கா. வில்வரத்தினம், கணக்காய்வாளர்கள்: யோகேஸ்வரன், இ. கந்தையா. (அ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 28ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.